CC No.14/2025

PW-2 சசிக்குமார்

Date 23.02.2026

A1 to A3 present. A4 absent. Petition U/s.317 of CRPC filed through online allowed. Accused counsel present.

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் என்னை விசாரித்த போது நான் பூமாதேவி கோவிலில் பூசாரியாக உள்ளதாக சொன்னேனா என்றால் ஆம், சொன்னேன். எதிரிகள் அடிக்கடி அ.சா.1ன் வீட்டிற்கு வந்து செல்வார்கள், அந்த விவரம் எனக்கு தெரியும். நான் சொல்வது பொய் என்றும், அந்த விவரத்தை நான் எனது போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் சம்பவத்தன்று மாலை 4 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்த போது சத்தம் கேட்டு சம்பவத்தை பார்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆம், சொல்லியுளேன்.

2. அதே போல் போலிசார் விசாரணையில் என்னுடன் சாட்சி சங்கர், நஞ்சுண்டன், ராமலிங்கம் ஆகியோர் ஓடிவந்து சம்பவத்தை பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆம், சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் மூன்று பேர் கண்ணாடியை உடைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரிகள் அ.சா.1ன் தலைமுடியை பிடித்து இழுத்தார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஆம், சொல்லியுள்ளேன். நான் சத்தம் கேட்டு சென்று பார்த்த போது அங்கு நான்கு கண்ணாடிகள் உடைந்து கிடந்தது.

3. அ.சா.1 சுந்தரி வீட்டிலிருந்து எனது வீடு சுமார் 20 அடி தூரத்தில் உள்ளது. எனது வீடு சுந்தரி வீட்டிற்கு கீழ் லைனில் உள்ளது என்றால் சரிதான். நான் சென்று பார்த்த போது எதிரிகளுடன் அ.சா.1 பேசிக்கொண்டிருந்தாரா

என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் சுந்தரி எதிரிகளை பார்த்து எதற்கு இங்கு வந்து சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு காட்டேரி வில்லேஜ் ஆயட்டியிலுள்ள தோட்டம் உங்களுடையதா, அதில் உன்னுடைய பிள்ளை ஜெகதாம்பாள் இலை பறிக்கிறார் என்று எதிரிகள் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. போலிசார் விசாரணையில் நான்கு கண்ணாடிகள் உடைந்து கிடந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆம், சொல்லியுள்ளேன். இரண்டு கண்ணாடிகள் உடைந்திருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 சுந்தரியம்மாளின் வலது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்துகொண்டிருந்ததை நான் பார்த்தேன். சம்பவம் குறித்து நான் போலிசாருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை, அட்டியில் இருந்தவர்கள் தான் கொடுத்தார்கள். சுந்தரியம்மாளின் கணவருக்கு நான் தான் போன் மூலம் தகவல் கொடுத்தேன்.

5. நான் சொல்வது போல் எனது வீடு 20 அடி தூரத்தில் இல்லை என்றும், அதற்கும் கூடுதலாக தள்ளி கீழ் லைனில் உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 சுந்தரி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும், நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.02.23 16:53:41 -0700

JUDICIAL MAGISTRATE,
COONOOR.